**தலைப்பு – 181 – வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| **தலைப்பு** | **திணைக்களம்** |
| --- | --- |
| 328 | மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு மற்றும் மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் என்பவற்றின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் அந்த அமைச்சினதும் திணைக்களத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 181 | வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு | 2015.07.16 |
| 328 | மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் | 2015.07.16 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**(அ) மொத்த நிதிஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 804.31 மில்லியனான மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 741.71 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் அமைச்சு மற்றும் திணைக்களத்தினது தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 61.38

மில்லியன் மற்றும் ரூபா 1.22 மில்லியன் அளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 11.57 சதவீத்திற்கும் 0.44 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 181 | 530.34 | 468.96 | 61.38 | 11.57 |
| 328 | 273.97 | 272.75 | 1.22 | 0.44 |
| மொத்தம் | **804.31** | **741.71** | **62.60** | **7.78** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 181 | 7.5 | 5.8 | 1.3 | 3.2 | 28.0 | 15.6 |
| 328 | 16.0 | 10.5 | 8.5 | 12.9 | 48.0 | 41.2 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5.97 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு | 6000/0000/00/0015/0181/000 | 5.90 |
| மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் | 6000/0000/00/0011/15/0185/000 | 0.07 |
| மொத்தம் | | **5.97** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 181 – வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 40,000,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 11 செலவின விடயங்களுக்கு ரூபா 10,526,703 ஆன மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய

நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தன.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 54 மில்லியனான நிதிஏற்பாடுகளில் ரூபா 40 மில்லியன் நிதி ஏற்பாடு அமைச்சின் எவ்வித வேண்டுகோளில்லாமல் திருத்திய பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டதாக 2015 யூலை 23 ஆந் திகதி அரச நிர்வாகம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் சனநாயக நிர்வாகம் தொடர்பான அமைச்சின் செயலாளரினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சிற்குரிய மோட்டார் வண்டியொன்று 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் ரூபா 7.5 மில்லியன் அளவிலான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் குறித்த விபத்து இடம்பெற்று 01 வருடம் 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்

கொள்வதற்கோ அல்லது பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கோ வண்டியை திருத்தியமைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கை 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த 07 வகையான பொருட் பற்றாக்குறை மற்றும் கைதவிர்ப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட 27 வகை பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 செயலாற்றல்**

2014 இன் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) தனியார் பிரிவின் வினைத்திறன் மேம்பாட்டிற்காக கம்பஹா, களுத்துறை, மாத்தறை, கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட 300 ‘‘கைசன்’’

நிகழ்ச்சித்திட்டங்களில் 128 அதாவது 43 சதவீதம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) உத்தியோகத்தர்களின் இயலுமைகளை மேம்படுத்துவதற்காக 25 குறுங்கால பயிற்சிப் பாடநெறிகளில் 1000 உத்தியோகத்தர்களின் இயலுமைகளை மேம்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அதில் 9 நிகழ்ச்சித்திட்டங்களில் 251 உத்தியோகத்தர்களின் இயலுமைகளை மேம்படுத்த முடியாமல் இருந்தது. அவ்வாறு நிறைவேற்றப்படாத சதவீதங்கள் முறையே 36 சதவீதம் மற்றும் 25 சதவீதமாக இருந்தன.

(iii) வினைத்திறன் மேம்பாட்டிற்காக தேசிய அறிவு முகாமைத்துவ போட்டிகள் மற்றும் மாநாடுகளை நடாத்தி பரிசளிப்பு விழாவினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆண்டினுள் ''சபல'' சஞ்சிகையின் 6 வெளியீடுகளை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அதில் 83 சதவீதம் அல்லது 5 சஞ்சிகைகள் வெளியிடப்பட்டிருந்தன.

(v) பிரதேச செயலகங்களிற்கு இணைக்கப்பட்டிருந்த வினைத்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 2014 ஆம் ஆண்டின் செயன்முன்னேற்றத்தைப் பரீட்சிப்பதற்கு 18 மாவட்டங்களின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் அந்தந்த பிரதேச செயலக பிரிவுகளில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு வழங்கப்பட்ட இலக்குகளை அந்த உத்தியோகத்தர்கள் அடைந்திராத 1347 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) அரச கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

2012/2013 ஆம் ஆண்டில் வினைத்திறன் விருது வழங்கல் விழாவிற்கு ரூபா 16 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கு பாதீட்டு மதிப்பீடொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் உரிய கடமைகள் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டதாக சான்றிதழொன்று இல்லாமல் குறித்த விழாவை ஒழுங்கு செய்த நிறுவனத்திற்கு ரூபா 9,472,502 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த 48 செயற்பாடுகளை நிறைவேற்றியமை தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தேசிய வினைத்திறன் விருது வழங்கல் விழா நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனத்துடன் 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் 20(iv) ஆம் பந்தியின் பிரகாரம் சேவை வழங்குனரால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இணங்கப்பட்ட பெறுமதியை விட மேலதிகமாக ரூபா 1,665,941 தொகையை செலுத்துவதற்கு முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2013 நவம்பர் 18 ஆந் திகதி இரண்டு தேசிய பத்திரிகைகளில் சனாதிபதி பதவி நிறைவிற்காக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு தேசிய வினைத்திறன் அமைச்சினால் பத்திரிகை நிறுவனங்களிற்கு ரூபா 347,200 தொகை செலுத்தப்பட்டிருந்தமை சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுப் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாடு பூராகவும் அமைந்துள்ள பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள 590 வினைத்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருகை, வெளிச்செல்லல், விடுமுறை பெற்றுக்கொள்ளல் மற்றும் கையளிக்கப்பட்ட செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட்டதை உறுதிப்படுத்தாமல் அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளம், சம்பள ஏற்றங்கள், படிகள் மற்றும் பிரயாணச் செலவினம் என்பன அமைச்சினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள இந்த உத்தியோகத்தர்களின் வெளிக்கள கடமைகளின் செயன்முன்னேற்ற அறிக்கைகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கைகளின் சரி பிழை பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் பௌதீக ரீதியாகப் பரீட்சிப்பதற்காக கம்பஹா மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு 2015 சனவரி 02 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 10 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 2 | - | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | 799 | 657 | 142 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 10 | 14 |
| | மொத்தம் | 849 | 677 | 172 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 172 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 328 – மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம்

---

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | வாகன நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647 (உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 4.2.1 பாதீட்டு முரண்கள்

02 செலவின விடயங்களுக்கு ரூபா 488,671.44 ஆன மிகை நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 17 சதவீதம் மற்றும் 32 சதவீதம் அளவிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 4.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கூற்று

32801 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 301,114 கூட்டுத்தொகையான மீதிகள் 01 ஆண்டு முதல் 3 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து காணப்பட்ட போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | விளைவற்றுக் காணப்பட்ட காலம் ஆண்டுகள் | குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்ட காலப்பகுதி ஆண்டுகள் |
|---|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகனங்கள் | 01 | - | 02 |
| (ii) | ஏனைய சொத்துக்கள் | 182 | 04 | - |

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வாகனங்கள் தொடர்பான முழுமையான மெய்மையாய்வொன்று மேற்கெள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | • 2014 சனவரி மாதம் முதல் 2015 ஏப்ரல் மாதம் வரை தலைமை அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்ட 102 உத்தியோகத்தர்களின் 1145 விடுமுறை தினங்கள் விடுமுறைப் பதிவேட்டில் 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>• நாடு பூராகவும் அமைந்துள்ள மாவட்ட / பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், செயற்திட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருகை, வெளிச்செல்லல் மற்றும் விடுமுறை தொடர்பான சகல நிர்வாக நடவடிக்கைகளும் |

| | |
|---|---|
| | மாவட்ட / பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 292 நிறுவனங்களில் 2015 மே 20 ஆந் திகதி வரை விடுமுறை அறிக்கைகள் திணைக்கத்திற்கு கிடைக்காமல் இருந்ததுடன் விடுமுறை பதிவேடுகளும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

----------------------------------------------

| | |
|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2014 சனவரி 24 ஆந் திகதி முதல் செயற்படாதிருந்த திணைக்களத்தின் கைவிரல் அடையாள இயந்திரத்தை 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**4.7 செயலாற்றல்**

-----------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மனித வலு மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் எதுவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மனித சக்தியை எதிர்வுகூறல்
- துறைசார் மனித சக்தியை திட்டமிடல்
- உரிய நிறுவனங்களுடன் கூட்டிணைப்பின் மூலம் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

- மனித சக்தி அபிவிருத்திக்காக உரிய கொள்கைகள் மற்றும் முன்மொழிவு திட்டங்களை தயாரித்தலும் அமுல்ப்படுத்தலும்.

(ii) திணைக்களத்தின் நீண்டகால இலக்குகளில் கவனம் செலுத்தப்பட்டிருந்த குழுக்கள், வலது குறைந்த நபர்கள் மற்றும் குறை அபிவிருத்தி பிரதேசங்களில் வசிக்கும் நபர்களிற்காக துறைசார் வசதிகளை வழங்குவது என்பன உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சுதந்திர தொழில் சேவையொன்றை வழங்கும் நோக்கில் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில் சேவைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 10,000 தொழில்களில் ஈடுபடுத்துதல் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அதில் 57 சதவீதம் அல்லது 5,766 நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட சமூக பொருளாதார தரவு கைநூல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 200,000 தொகையான நிதிஏற்பாடுகளை மிகைத்து ரூபா 45,980 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 80 சதவீதமாக இருந்தது. அவ்வாறே ஹொட்டேல் கைத்தொழிலுக்கான தொழில் வெளியீட்டிற்காக (Publicatin of job Profile Hotel Industry) நிதிஏற்பாடுகளை மிகைத்து ரூபா 170,025 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது இணையத்தளத்தில் பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கெப் வண்டியின் திருத்த நடவடிக்கைகள், சேவை நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 121,989 தொகை 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

### 4.9 முகாமைத்துவ நலிவுகள்

குறித்த காலப்பகுதியினுள் நியமன அதிகாரியினால் பதில் கடமை காலப்பகுதியை நீடிப்பதற்கு அங்கீகாரம் பெறப்படாமல் இலங்கை நிர்வாக சேவையின் III தரத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் பதவிகளில் பதில் கடமைப் புரிவதற்கும் முகாமைத்துவ உதவியாளர் I ஆம் தரத்தின் உத்தியோகத்தரொருவர் நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமை புரிவதற்கும் முறையே 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி, 2014 ஒக்தோபர் 09 ஆந் திகதி மற்றும் 2014 ஜனவரி 01 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தனர்.

### 4.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 10 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 673 | 521 | 152 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 12 | 02 |
| | மொத்தம் | 702 | 543 | 159 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்குறித்த உள்ளவாறான பதவியணியினர் போதியளவில் இருப்பதாக பொது நிர்வாக அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாக 2015 யூலை 27 ஆந் திகதி கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) தலைமை அலுவலகத்திற்கு புறம்பாக வருகை, வெளிச்செல்லல் மற்றும் விடுமுறை தொடர்பான சகல முழுப் பொறுப்புக்கள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் உரிய மாவட்ட / பிரதேச செயலாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக முகாமைத்துவத்தினால் முறையாக மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 288 அலுவலகங்களில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இலக்குகளை அடையப் பெறாத சந்தர்ப்பங்கள் 222 ஆக இருந்தது.

(iv) 195 களப் பரிசோதனை மேற்பார்வை மாவட்ட / பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட அலுவலகங்களுக்கு உரிய குறித்த பரிசோதனை அறிக்கைகள் சில மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன